சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண். 148/2019

2021 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15 ம் நாள் வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.எஸ்.இந்துலதா, பி.ஏ,பி.எல்., சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.ராஜேஷ்குமார் | வயது | |
| த/பெ. | மணி | ஜாதி | |
| கிராமம் | | சமயம் | |
| தாலூக்கா | | தொழில் | |

முதல் விசாரணை-

பிரமாணதாரர் ஆஜர். பிரமாணப் பத்திரிக்கையில் உள்ள சங்கதிகள் பிரமாணதாரரால் உறுதி செய்யப்பட்டு அவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டார். அவர் மூலம் 08.09.1969 தேதியிட்ட சுப்பைய கவுடர் மற்றும் கானிசாமி இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா சா ஆ 1 எனவும் 13.11.2019 தேதியிட்ட கணிணி சிட்டா நகல் வா சா ஆ 2 எனவும் வழிகாட்டி மதிப்பு வா சா ஆ 3 எனவும் குறியீடு செய்யப்பட்டது. மேலும் ஆவணங்களை குறியீடு செய்ய கால அவகாசம் வேண்டியதால் ஒத்திவைக்கப்படுகிறது.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.

**SUB COURT, METTUPALAYAM**